மலையக வெளியீட்டகம்

புசல்லாவை

க ண ப தி

# கடவுள் படைக்காத மனிதர்கள்

# கடவுள்
# படைக்காத மனிதர்கள்

புசல்லாவை கணபதி

மலையகம் வெளியீட்டகம்
57, மஹிந்த பிளேஸ்,
கொழும்பு 06.

நூல் : கடவுள் படைக்காத மனிதர்கள் (கவிதை)
ஆசிரியர் : புசல்லாவை கணபதி ©
முதற்பதிப்பு : ஜூன் 2010
அட்டை, பக்க அமைப்பு : எஸ்.அனுர்ஜன்
அச்சிட்டோர் : அம்பாள் அச்சகம்
273/5, பதிவாளர் காரியாலய வீதி,
கொட்டகலை.
வெளியீட்டாளர் : மலையக வெளியீட்டகம்
57, மஹிந்த பிளேஸ், கொழும்பு 06.
0776612315

Title : Kadavul Padaikkatha Manitharkal (Poems)
Author : Pussellawai Ganapathy ©
New Peacock Group, Pussellawa.
pussellawaiganapthy@gmail.com
071 2434118, 075 5290184
First Edition : June, 2010
Cover Design : S.Anurjan -
Grfix Layout : Design Lab - 0114 574 777
# 190, George R. De. Silva Mw,
Kotahena, Colombo 13.
Printed : Ambaal Press
273/3, Registrar Office Lane, Kotagala
Publishers : Hill Country Publishing House,
Price : Rs. 196/=
ISBN : 978-955-9084-24-2

# பதிப்புரை

கலைத்துவமிக்க தமது கவிதா வரிகளின் மூலம் சமூகத்தில் "கடவுள் படைக்காத மனிதர்"களை தேடுகிறார் புசல்லாவை கணபதி. இவரது கவிதைகள் சமூகத்தை கேள்விக்குறியாக தட்டிக் கேட்கின்றது.

மலையக இலக்கிய வானில் திசை தெரிந்து கவிக்குயிலாக சிறகடிக்கும் கணபதியின் கவிதைகள் ஒரு சமூக மாற்றத்திற்கான அடித்தளமாகும். அதனை தட்டிக் கேட்பதிலும், மாற்றத்தை தேடுவதிலும் துடிப்புமிக்க இளைய தலைமுறையின் பிரதி நிதியாக கவிஞர் விளங்குகிறார்.

*என் இருட்டை கிழிக்கும்*
*இந்த சூரியக்கனவுகள்*
*நாளை பலிக்கும் என்ற*
*நம்பிக்கையோடு.....*

*அதோ! அக்கினிக் குஞ்சுகளாய்*
*தெரியும்*
*என் மலையகத்தம்பிகளை*
*தயார்படுத்திக் கொண்டிருக்கின்றேன்.*

இவ்வாறு நாளைய விடியலுக்காக எண்ணங்களை வண்ணக் கவிதையாக படைக்கும் கவிஞர் புசல்லாவை கணபதி. இந்த கவிதை தொகுதி மலையக வெளியீட்டகத்தின் வெளியீடாக வருகின்றது. இதனை வரவேற்று வாழ்த்துக் கூறவேண்டியது உங்கள் கடமையாகும்.

**அந்தனிஜீவா**
மலையக வெளியீட்டகம்.

57, மஹிந்த பிளேஸ்,
கொழும்பு-06.

# இது...

"டு" என

பிழைத்தெழுதியபோது

"அ" - என

திருத்திச் சொல்லி - என்

வெற்றித் திசைகளுக்கு

வித்திட்ட ஆசான்களுக்கு...

## படைப்புத் திறனும்
## சமூக அக்கறையும் கொண்ட கவிதைகள்

கொட்டகலையில் ஆசிரியர் கலாசாலையில் பயிலும் ஆசிரிய மாணவர்கள் வெறுமனே ஆசிரியர் கல்விப் பயிற்சியைக் கற்பது மாத்திரமன்றி கலை இலக்கியத் துறையிலும் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஏறத்தாழ 30 வருட காலத்தைக் கடந்து இயங்கி வரும் இக்கலாசாலையிலிருந்து பல கலை இலக்கியங்களில் ஈடுபட்டு வந்துள்ளதே கல்லூரி வரலாற்று சான்று பகிரும் பல கவிதை நூல்கள் இக்கலாசாலையிலிருந்து வெளிவந்துள்ளன.

"தூக்கி வளர்த்த துயரம், கையளவு மனசு" ஆகிய கவிதைத் தொகுப்புக்கள் கலாசாலையில் முத்திரை பதித்தவை. அந்த வகையில் தே.கணபதியின் "கடவுள் படைக்காத மனிதர்கள் கவிதைப் படைப்பின் வரவும், இக்கலாசாலை யின் கலை இலக்கியத் துறையில் புதிய அத்தியாயத்தை தோற்றுவிக்கலாம். இவர் சமூக அவலங்களையும், பிரச்சினைகளையும் இனங்கண்டு தனது கவிதையில் வெளிப்படுத்தியுள்ளார்.

கவிதை என்பது நிகழ்காலத்தின் பரிமாணம் என்ற வகையில் சமூகம் அரசியல், காதல், அவலம் என்ற பாணியில் பதிவுசெய்துள்ளார். படைப்புத் திறனும் சமூக அக்கறையும் கொண்ட கவிதைகள் காலத்தால் பதிவுசெய்யக் கூடியவை. ஆசிரியராக மாத்திரமன்றி, கவிதைத் துறையிலும் மிளிர எனது நல்வாழ்த்துக்கள்.

அரசினர் ஆசிரியர் கலாசாலை
கொட்டகலை.

எஸ்.ஜெயக்குமார்
முதல்வர்

# ஞாபகத்திற்கும்

# நன்றிக்கும்

அமரர் ஸ்ரீதர் பிச்சையப்பா, எஸ்.ஜெயக்குமார், கவிஞர் சு.முரளிதரன், A.செல்வேந்திரன், கல்லூரி விரிவுரையாளர்கள், நண்பர்கள், மாணவர் பேரவை, முத்தமிழ் கலாமன்றம், தேட்டம் சுவர்பலகை, தினக்குரல், வீரகேசரி, மெட்ரோ நியூஸ், கொழுந்து, நீங்களும் எழுதலாம், சூரியகாந்தி,....

என் பக்கம்...

காத்திருக்க நேரமில்லை
உணர்வுகள்
உள்ளே...

வரவேற்போடு

**புசல்லாவை கணபதி**

# பொய் பேசத் தெரியாத எழுத்துக்கள்...!

எழுதுமையை போதையூட்டும் விருந்தாக்கலாம். அதனையே நோய் தீர்க்கும் மருந்தாகவும் ஆக்கலாம். கொஞ்சமாய் விருந்து. கூடுதலாய் மருந்தென ஒரு படைப்பிலக்கியம் உயிர்ப்பெறும்போது அது மகத்தான மக்கள் பணியாகின்றது. கவிஞர் புசல்லாவை கணபதியின் உயிர்த்துடிப்புள்ள வரிகளில் உண்மைகள் ஓங்கியிருக்கின்றன. ஒப்பனைகள் ஒதுங்கியிருக்கின்றன.

*"உடுத்தலுக்கும்*
*போர்த்தலுக்கும்*
*உபயோகப்படும்*
*அந்த*
*தீபாவளி ஒயில் சேலை"*

*"ஒருநாள்*
*அப்பாவிடம் சொல்ல வேண்டும்*
*படிப்பைத் தவிர*
*எனக்கு*
*எல்லாவற்றையும்*
*நீங்கள்*
*படித்துக் கொடுத்தீர்கள் என்று"*

இப்படி பொய் பேசத் தெரியாத எழுத்துக்கள் இந்தத் தொகுப்பு முழுவதிலும் பூவும் முள்ளுமாகப் பூத்திருக்கின்றன. சொல், சொல்லும் பொருள், சொல்கின்ற பாணி எல்லாமே இந்த விளையும் மண்ணின் வளையும் மாந்தரின் மூச்சுக் காற்றோடு கலந்திருப்பதன் மூலமாக இலக்கியம் இன்னொரு தடவையும் வெற்றிபெற்றிருக்கிறது. வறண்டுபோன வாழ்க்கைகளே திரண்டு போயிருக்கம் இம் மண்மீது கொண்ட நேயத்தால் கவிஞரின் பேனை "போர் செய்யப் புறப்படுகிறேன்" என்று ஆங்காங்கே

அடம் பிடிக்கிறது. மைசிந்தும் பேனாக்களில் பொய்முகங்கள் கிழித்த நிணநீர் கொஞ்சம் சிந்தாவிட்டால் இலக்கியத்தால் என்ன பயன்.

*"வெவ்வேறுபட்ட முகங்கள்*
*நீயும் நானும்*
*மாறி மாறி*
*காறி உமிழ்ந்துகொண்டு..."*

போன்ற வரிகள் கொண்ட சில கவிதைகள் நம்மை நாமே சுய விமர்சனம் செய்துகொள்ளும் பாணியில் பல வினாக்களை கண்ணில் அறைந்த ஆணிபோல் சுளீர் எனத் தைக்கின்றன.

*தொடருந்து துன்பங்கள்*
*சுட்டுவிரல் இழந்தவனின் தூரிகை*
*கடவுள் படைக்காத மனிதர்கள்*
*வளமான கெட்டகாலம்*

கவிஞர் ஒவ்வொரு கவிதைக்கும் சூட்டியிருக்கும் தலைப்புகளே நம்மோடு அதிகம் பேசுகின்றன.

இந்தத் தொகுப்பில் வந்துள்ள கவிதைகளை வாசித்துவிட்டு கீழே வைக்கும் போது மனதுக்குள் நம்பிக்கைகள் நிறைகின்றன. நம் மண் விட்டுப் போகாத மனசுகள் விடியலுக்கான வெளிச்சத்துடன் வெகு கிட்டவாகவே காத்திருப்பது உண்மைதான்.

வரிவரியாய் வாசித்து அனுபவித்த வாசகனாய் கவிஞரை வாழ்த்துவதில் நிறைகிறேன்.

**ஆ.செல்வேந்திரன்**

விரிவுரையாளர்,
அரசினர் ஆசிரியர் கலாசாலை, கொட்டகலை.



# அழைப்பிதழ் அற்ற விருந்தாளியாய்

பொய்த்துப்போன
வானத்திலிருந்து விழும்
மழைத்துளியாய்
உன் ஓரப்பார்வை!

இன்றுவரை
உலக அதிசயத்திற்கு
விண்ணப்பித்திராத
உன் கலைந்த கேசம்!

என் கவனிப்புக்காகவே
எனக்கு பிடிக்காததை
அடிக்கடிச் செய்யும்
உன் நக கடிப்பு

ஒரு அழகான புத்தகத்தை
திறக்காமலே படித்தது போல்
உன்னையே பார்த்துக்
கொண்டிருக்க வைக்கும்
உன் அழகான மௌனம்

உன் “குட்மோர்னிங்”கு
பிறகே விடிவதாய்
தோன்றுகின்ற - என்
நாளாந்த பொழுது!

நீ விடுமுறை
எடுத்துக் கொள்கிற போதெல்லாம்
ஒரு மனித வெடிகுண்டை போல்
எனக்கான,
இதய அவஸ்த்தைகள்

இதெல்லாம்
எதற்கென - நான்
இமை மூடிக்கொள்கிற
போதெல்லாம்

ஒரு அழைப்பிதழற்ற
விருந்தாளியைப் போல்
நீ வந்து
வதை செய்கின்ற - என்
இராத்திரி கனவுகளை
நான் என்ன செய்வது...?





# காலனின் முகவர் நாம்

மனிதா
உன் பகுத்தறிவு பற்றி
நீயே பாராட்டிக்கொள்...

என் சந்ததிபற்றிய
வளர்ச்சியில்
உன் அக்கறை
அளப்பரியது

உனை உறிஞ்சுவதற்கென்றே
நீ உடல் வளர்க்கின்றாய்

எம் இருப்பிடங்களை
நீயே ஏற்படுத்துகிறாய்

சிரட்டைகளையும்
டயர்களையும்
வெட்டிய குரும்பைகளையும்
வீடுகளாக்கி
எமை விளையாடவைக்கிறாய்

மனிதா
சூழல் பற்றிய
அக்கறையற்ற உன்னை
தொட்டுக்கொள்ளவே
நாம் துரத்துகிறோம்....

தொட்டு கொள்ளாமல்
பார்த்துக்கொள்.. பின்
விட்டு விட்டு வரும்
காய்ச்சலும் - வாந்தியும்..!

கந்தசாமியும்
கருணாதாசவும்
காதரும் - என் தொடுகையால்
“டெங்கு” என்று
ஆங்கிலப் பெயர்சூட்டி
கொள்வார்கள்



நாம் அழையாவிருந்தாளிகள்தான்
எம் வருகைக்கான
சிகப்பு கம்பளம்
உன் அசுத்த சூழலிலே
விரித்து வைத்திருக்கிறாய்!

காலனின் முகவர் நாம்
நூற்றுக்களாய் சேவையை
நெருங்கி விட்டோம்

காலனின் விண்ணப்பம்
ஆயிரமாயிரமாய்
அதிகரித்துக் கொண்டிருக்கிறது

ஒரு உறிஞ்சல் தேடலோடு
உலாவுகிறோம்
சூழல்பற்றிய அக்கறை
உனை தொடும்வரையில்
நாம்
டெங்கு நுளம்புகளாய்
துரத்திக்கொண்டே...

# வசூல்ராஜாக்களும்

எம் வாழ்வு நாட்களை
நகர்த்திக் கொள்வதற்காய்
ஒரே மலையகச் சுவாசத்தில்
நீயும் - நானும்

வெவ்வேறுபட்ட முகங்கள்
நீயும் நானும்
மாறி மாறி
காறி உமிழ்ந்து கொண்டு...

இன்றுவரை ஆயுட்கைதியாய்
கம்பிகளில்லாத
லயச்சிறைக்குள்!

உன் பாதைகளில்
நான் முட்களையும்
என் பாதைகளில்
நீ முட்களையும்
நம் பயணங்களை
முடக்கி விடுகின்ற முயற்சியில்...



# முட்டாள் சாக்கடைகளும்


அரியாசன ராஜாக்களுக்கு
குண்டர்களாகவும்
கொடிபிடிப்பவர்களாகவும்
கோசமிடும் கூத்தாடிகளாகவும்...

நம் சுதந்திர வாழ்தலை
அம்மணப்படுத்துகிறவர்களுக்கு
பொன்னாடை போர்த்தும்
முட்டாள் சாக்கடைகளாய்
இருந்து, இறந்து போகட்டும்

நாளை - 'சங்கங்கள்'
அமைக்கும்
வசூல் ராஜாக்களின்
கொடிகள் கிழித்து...

தேயிலையை
சின்னமாக்கி
சிகரத்தில் ஏற்றிடுவோம்
மலையகத்தவரென்ற
ஒற்றைப் பெயரோடு...

அந்த நாளுக்காக - நாம்
அவகாசம் தேடும் வரை
சங்கங்களும் - சந்தாவும்
வசூல் ராஜாக்களின்
வாய்ப்புக்கள் தான்...





# நிர்வாணப்படுத்தப்படும் முன்மொழிவுகள்

*வக்கீல்*
*வைத்தியன்*
*பொறியியலாளன் - என்*
*பள்ளிக்கால*
*இலட்சிய முன்மொழிவுகள்*

*குறிக்கோள் முகவரி*
*அடைவதற்காய்*
*'அ'வை*
*அழுத்திச் சொல்லிக் கொடுத்த*
*ஆசிரியர்...*

*வகுப்புகளும்*
*வரிசை வரிசை*
*ஏறுவரிசையாய்*

*மதிப்போடு என் மனசு*
*மதிப்பிட்டும் கொண்ட*
*வரிசை வரிசையாய்*
*ஆசிரியர்கள்...*



என் இலட்சிய மொழிவுகளுக்கு
முகவரி காட்டும் முயற்சியில்
ஒரு சில
உத்தம ஆசிரியர்கள்!

பலர்,
பொழுதை போக்குவதெப்படியென்ற
புத்தகத்தை
புரட்டிக் கொண்டிருந்தனர்...

தன் பெயரையே
தாறுமாறாய் எழுதும்
பத்தாம் வகுப்பு அப்பாவிகளை
அறிமுகப்படுத்திய
பாவிகளையும் பார்த்து
விழிகள் வேர்த்தேன்...

வெகுண்டெழ முயற்சிக்கின்ற
போதெல்லாம்
'உருப்படாதவன்' என்ற விமர்சன
சவுக்கடிகள் - என்
நகர்தலை நசுக்கியது

என் முன்மொழிவுகளை
அப்புறப்படுத்தி அவதரிக்கின்றேன்
ஒரு ஆசிரியனாய்!

இலட்சியத்தை குருதட்சணையாய்
கேட்கும்
நவீன துரோண ஆசான்களிடமிருந்து
என் சமூகத்தை
தூக்கி நிறுத்தும்
துணிச்சலோடு!

# கோவண நாகரிகம்

அப்போதெல்லாம்
வீட்டுத்திண்ணையில்
கூட்டாஞ்சோறாக்கி
பம்பரம் சுற்றி....

அவனுக்கென்றால்
கலர் கலராய் சட்டைகள்

என் காற்சட்டைக்கு
பின்புறத்தில்
சூரியன் சுட்டுவிடுவான்

நான் தோட்டத்துப்பாடசாலையோடு
மாட்டுமந்தைக்குள்
மாடாகிப்போனேன்

அவன்,
பழுப்பு பட்டம் பதவி
பங்களா காரோடு....

டேய், வா, போ
இதெல்லாம் எனக்கு
அநாகரிகமாய் பட்டது

அம்மாவை மம்மியாய்
அப்பாவை டாடியாய்
சர்வதேசம் பேசினான்

நேற்று அவன்
ஊருக்கு
காருக்குள் வந்தான்

பழைய மண்
பழைய நண்பன்
புதிய மனிதனாய்

என் உதடுகள்
வாருங்களென்று
பன்மை பேசியது

அவன் ஒருமையில்
ஊறிப்போயிருந்தான்

எதேச்சையாய்
கால் தடுக்க
தடுமாறினான்...

“அம்மா”
ஆபத்தில் மட்டும்
மம்மி அம்மாவென
உடுதடுகளில்
தமிழ்ப்பால் சுரந்தது
அதிசயம்தான்....!



# வளமான கெட்டகாலம்....

புசல்லாவை கணபதி

நாம் சொல்வதெல்லாம்
உண்மை,
உண்மையை தவிர
வேறொன்றுமில்லை!

கட்சிகளால் தான்
நாம் காலத்தள்ளுகிறோம்


சந்தாப்பணத்தால் தான்
சந்தோசத்தில்
சங்கமிக்கின்றோம்

மேதினத்தில் மட்டும்
மெய்யாய் பொய் சொல்லும்
எம் நாக்குகள்
குலதெய்வத்தை
கும்பிடாத எம் கரங்கள்
தேர்தல் காலத்தில் மட்டும்
பழக்கத்தை மாற்றிக்கொண்டு
பாட்டாளியையும்
வணங்கும்

நாம் ஒரு ரூபாய்
சம்பளத்திற்காய்
உண்ணும்
விரதமிருப்பவர்கள்

நாங்கள்
கம்பிகளில்லா
லயச்சிறைகளின்
காவலாளிகள்
நாங்கள் தோட்டத்து
ராஜாக்கள்
சொகுசு சவாரிக்காய்
பாமருந்துகளின் மேல்
பயணிப்போம்

எங்களைத்தான்
தேங்காய் மாசி
ஆய்வாளர்கள்



மக்கள் தொண்டனென்று
மகுடம் சூட்டுகிறார்கள்

தொழிலாளர்கள்
எங்கள் சுகம் தேடலுக்கு
சொர்க்கம் காட்டுகிறவர்கள்

சந்தாப்பணம் இருக்கும் வரை
எங்கள் குபேர கற்பனையால்
நிலவுக்குச் செல்லவும்
நினைத்துக் கொள்வோம்

தீர்ப்புச்சொல்லாமல்
நீதிபதி
திகைத்து நின்றார்

குற்றமிழைத்தவனை விட
வழிகாட்டியாய்
இருந்தவனுக்கே

அதிக தண்டனையென்று
தீர்ப்பெழுதினார்


சந்தாப்பணம் கொடுத்த
தோட்டத்து மக்களுக்காக
சிறைக்கதவு
வரவேற்பு செய்தது

"சந்தாப்பணத்தை
செலவழித்தாவது
வழக்கை வெல்வோம்"

மக்கள் தலைவர்
சொல்லிக்கொண்டே
நிமிர்ந்து நடந்தார்...

நீதி தேவதை
எப்போதும் போலவே....
பார்வையற்ற
மௌனியானாள்!





# முடிச்சுகள் அவிழ்க்கும் முயற்சிகள்

இனியும் முடியாது
உன் விரலிடுக்கில்
ஒரு பேனாவாய்
இருப்பதற்கு....

வெட்கக்கேடு
உன் சுயம்பற்றி
எழுதிக்கொள்வதற்காக
இது வரைக்கும்
இருந்திருக்கிறேனென்று

உன் ஆக்கிரப்பு
யோசனையின் போதெல்லாம்
சிறைபட்டதுபோதும்

துகிலுரியப்பட்ட
என் கற்பனைகள்
உயிர்பற்றி நிரூபித்தலுக்கு
மட்டுமான
என் நாளாந்த சுவாசம்

விடுதலைபற்றி
சிந்திக்கும் போதெல்லாம்
கம்பிகள்தான் நிரந்தரமென்று
காட்சிப்படுத்தினாய்

என் விசாரிப்புகளின்றியே
நீயே எழுதிய கதைகளை
கவிதைகளென
காரணப்பெயராக்கினாய்



என் இராத்திரிகளில்
சில நிமிசங்களை....
உன் பசியடங்கலுக்காய்... என்
அருகாமையை
அரவணைத்துக் கொள்வாய்!

இனியும் முடியாது – உன்
அடக்கு முறைகளில்
அடங்கி கொள்வதற்கு

ஒரு பாரதியைபோல்
கவிதைகளில் அழுது
என் வேதனைகளுக்கு
ஒத்தடம் கொடுக்க
ஒத்துக்கொள்ளாத மனசோடு....

முகத்திரை கிழித்து
முற்றத்திற்கு வர
முயற்சித்து விட்டேன்
பாரதியின் கவிதையை
பலித்திட செய்யும்
புதுமைப் பெண்ணாய்!

# சுவாசித்தலுக்கான முயற்சி...

கேவலம் - உன்
முற்றுகையின் போதெல்லாம்
என் கிளைகளை மட்டுமே
நெரித்துச் சரித்தாய்

இந்த உதிர்வுகள் பற்றி
சந்தோசப்பட்டுக்கொள்
அசைக்க முடியாத
ஆணிவேராய்
அவதரித்துக் கொண்டிருக்கிறேன்

எனக்கான வரங்களெல்லாம்
என் தவமிருப்புகளால்தான்
எழுந்தேன் - நடக்க
எத்தணிக்கின்றேன்
வழிநெடுக நீ
வீழ்த்துவதெற்கென்றே

காத்திரு - என்
கடைசி சொட்டுவரை
என்றோ ஒருநாள்



என்கிளைகள் பரப்பி
மீண்டும் ஒரு
விருட்சமாய் வருவேன்.

இடறி விழுகின்ற போதெல்லாம்
எனக்கான தனித்த முயற்சியில்
ஒரு தீவிர வாதியைப் போல்
என் தேடல்
தொடர்ந்து கொண்டே...

வா நெருங்கு
மீண்டும் மீண்டும்
முற்றுகையிடு...

உன் துரத்தல்களால் தான்
நான் ஓடிக் கொண்டிருக்கிறேன்

ஆதலால் முற்றுகையிடு
துரத்திக் கொண்டேயிரு
இரவலற்ற என் சுவாசத்தை
தேடும்வரை

# அவசர உரசல்கள்

பசியற்ற பொழுது கேட்கும்
பிச்சைக்காரன்


தவமின்றி பிரபஞ்ச ஞானிஸ்தனாய்
வீதியோர
பைத்தியக்காரன் !

ஏதோ போட்டுக் கொண்ட
ஒப்பனைக்காய்
வாழ்க்கை மேடையில்
காமதானம் தீர்க்கின்ற
விபச்சாரிகள்

நடைபழக்கிய
நடைவண்டி
காலாவதியாகுமுன்னே
வீதிக்கு தள்ளப்பட்ட
வயோதிபங்கள்

பணக்கார பங்களாவில்
சலவை இயந்திரமாய்
பயன்பட்டு போகின்ற
பள்ளிவயசு சிறுவர்கள்





இந்த அவதரிப்புக்களெல்லாம்
மனிதனென்ற
உயர்திணையின்
உள்ளடக்கங்கள்!

ஏதோ அந்த
அவசர உடல் உரசல்களில்,
ஒரு துளி விந்தின்
உற்பத்திற்கு
உரிமையாளர்கள் யார்?

துருப்பிடித்துப்போன
எம் கூக்குரல்கள்...

அணிவகுத்து நிற்கும்
அவலங்கள்....

எம் எலும்பொடித்து
விறகெரிக்கும்
சந்தா உறவுகள்!

இதுவரை வெளுக்காமலே
இருக்கும்
வெள்ளைக்கார முகாம்களாய்
'லயன்கள்'





# வெள்ளைக்கார முகாம்கள்

ரோடுகள் போடுவதற்காய் (வதாய்)
புள்ளிக்கோடுகளை
போட்டுக்கொள்ளும்
அரசியல் சாத்தான்கள்

இதெல்லாம்
மரணிக்கின்ற
மலையகம் பிறக்கும்....

நீ மௌனம் கலைத்து
கர்ஜனை செய்யும்
காலம் வந்தால்!



# சுட்டுவிரலிழந்தவனின் தூரிகை



நீயற்ற தனிமை
பூக்காத நந்தவனம்

நீயற்ற தனிமை
சுட்டுவிரலிழந்தவனிடம்
தூரிகை

நீயற்ற தனிமை
நித்திரையை
விவாகரத்தாக்கிய
இரவு

நீயற்ற தனிமை
நிலவின் எதிர்பார்ப்பில்
நிற்கின்ற அமாவாசை

நீயற்ற தனிமை
வெறிச்சோடிக்கிடக்கின்ற
என் சாலை

நீயற்ற தனிமை
புத்தாடை - பட்டாசு
இல்லாத தீபாவளி

நீயற்ற தனிமை
கரும்பு கசக்கின்ற
பொழுதுகள்

நீயற்ற தனிமை
கதிரவனோடு புணராத
கிழக்கு

நீயற்ற தனிமை
எனக்கொரு
மரணத்தின்
ஒத்திகை...




அமாவாசைகள்
எதிர்பார்க்கின்ற
பௌர்ணமிகளாய் – எம்
இலட்சியங்கள்...

சொன்னவர்கள்
சொல்லாமலே செய்தார்கள்
ஊருக்கு புதிதாய் ஒரு
'பொது மயானம்'

அம்மன் திருவிழாவில்
அண்டாவோடு
அரிசி மூடைகள்...

தேர்தல் காலத்தில்
போஸ்டர் ஒட்ட
பயன்பட்டுப்போன
வாசிகசாலை சுவர்
சலவைக் காணாத அசிங்கமாய்...

# சொகுசு சவாரிக்காரர்கள்



எப்போதோ
இறக்கிப் போடப்பட்ட
சீமெந்து மூடைகள்
இறுகிப்போய் விட்டது
தொழிலாளியின் உள்ளம் போல்!

இன்றுவரை
ஏராளமான லயக்கொடாப்பு
இரகசியங்கள்....

பாமரனின் வாக்குப்
புள்ளடிக்காய்
வலம் வருகின்ற
சாக்கடைத் தலைமைகள்....

அவர்களின் சொகுசு
சவாரிக்காய்
குனிந்து நிற்கின்றோம்
மலையகத்து எருதுகளாய்...




# வாக்குறுதி வலை விரிப்புக்கள்...

தேசத்தின் தலைவிதியை
நிர்ணயிக்கின்ற
தேர்தல் புள்ளடிகள்...

வாக்குறுதி
வலைவிரிப்புக்கள்
அப்பாவிகள் மட்டுமே
அகப்பட்டுக் கொள்கிறார்கள்...!

தேர்தல் சந்தையில்
வசைபாடல்களுக்கே – நல்ல
வியாபாரம்!


கொள்கையில் மாற்றம்
கொடிகளில் மாற்றம்
எங்கள் வீட்டுப்பிள்ளையாய்...
ஊருக்கு வந்து போகும்
அரியாசன ராஜாக்கள்...



போஸ்டர் ஆடைகள்
போட்டுக்கொள்கின்ற
கொழுந்து மடுவச்
சுவர்

பாவம் அப்பாவிகள்
சொர்க்க சொப்பனங்களில்
சுகம் காண்பவர்கள்

அவலங்கள் சுமக்காத
விடியலுக்காய்
எங்கள் புள்ளடிகள்
இனியாவது இருக்கட்டும்.



# தாலிக்கு எத்தனை வயசு...?

புசல்லாவை கணபதி

அப்பாவின்
சாராய வாடை
வரும்போதெல்லாம்
அம்மாவின் நினைப்புதான்...

பாவம் அம்மா
சாமிபடத்துக்குமுன்
தாலிக்கு குங்கும பொட்டிட்டு
வேண்டுவாள்

இப்போதைக்கு
அம்மாவிடம்
ஒற்றை மூக்குத்தி மட்டும்தான்
ஊசலாடியது

நேற்றோடு
அந்த மூக்குத்தியும்
சாராய போத்தலுக்கு – அப்பா
சமர்ப்பணமாக்கிவிட்டார்.

குங்கும தாலிக்கு
குந்தகம் வருமோ
அம்மாவின் வேண்டுதலும்
அதுவாகத்தானோ...

அப்பாவின் போதைக்கு
அம்மாவின் தாலிமட்டும்தான்
சுமங்கலியென
சொல்லிக்கொண்டிருக்கிறது

கும்பிடும் சாமிதான்
குறி சொல்ல வேண்டும்
அம்மாவின் தாலி
காப்பாற்றப்படுமா என்று





# பேனாக்காரனின் வாக்குமூலம்

சாவதென்றே
முடிவெடுத்து விட்டேன்
சுதந்திரமாக
சாக வேண்டுமென்று...

எப்போதோ
ஏற்படுத்திக்கொண்டது
தீர்வை திருத்தியெழுத
திராணியில்லை எனக்கு

சீக்கிரம் செத்தாகவேண்டும்
ஒரு தியான திருப்தி போல
அமைதியாய்

அவலம்
மரண ஓலம்
என் நாளைகளையெல்லாம்
மனம் கறையானாய் அரித்து
ரணப்படுத்திக் கொண்டிருக்கிறது

சலித்துப்போன வாழ்வு
'ச்சீ' என
எச்சில் துப்பிக் கொண்டும்....



இருந்தும் ஒரு புத்தனை போல
காவிக்குள் செல்ல
மனசின் கால்களுக்கு
மனமில்லை

கண்ணிவெடிகளும்
தோட்டாக்களும்
கோட்சேக்களின்
கொடூரக் கண்களும்
மனித உயிர் தின்று
ஏப்பம் விட பேரம் பேசிக்
கொண்டிருக்கிறது!

அதற்குள் நானும்
இன்று நாளை என்றோ
அடங்கி போகாமல்

சீக்கிரம்
செத்தாக வேண்டும்
சுதந்திரமாகவே!

ஏதோ ஒரு துப்பாக்கிமுனை
என் உயிர் உறிஞ்சுமேயானால்
நாளை எனக்கும் சிலை வைக்கும்
மகாத்மாவாய்...

ஆதலால்
மனிதனாய் கேட்கிறேன்
மரணமே வா
மரணிக்க வேண்டும்
சுதந்திரமாகவே...

# அவலம்*.com

கொய்தலென்பது
கொழுந்துகளுக்கென்றில்லை
எங்களையும்
இடுப்பொடித்து பார்க்கிறார்கள்...!

பேரம் பேசுகிறார்கள்
காரமில்லாத பேச்சுகளால்
கறையான்களுக்குத் தான் தீணி
புழுத்துப் போன பொய்களால்!

கொடிகளுக்கு ஏனோ
குறைச்சலில்லை
சலவைக் காரர்களும்
பெருகி விட்டார்கள்
அழுக்குகள் அதிகரித்து போனதால்

குரல் வலையை தொலைத்தவர்கள்
உரிமைக்குரல்
கொடுக்கிறார்களாம்
ஊமைத் தலைவர்கள்!

வக்கிரம்
வைராக்கியம்
விரக்தி எங்களுக்குள்ளே
சுவாசிப்பதென்பதே மட்டும்
உரிமையாகி போனவர்கள்
ஏக்கங்கள்

சுழன்று – சுழன்று
ஒரே இடத்தில்
தொற்றிக் கொள்கிறது
கவலையும் – கண்ணீரும்



தேசிய பொருளாதாரம்
நிமிறிய போதெல்லாம்
எங்கள் வேர்வை துளியால் தான்
விடையெழுதினோம்



தூற்றுக்காய்
கோசமிடுகிறோம்
கூத்தாடிகளாய்

முதலாளி முதலைகள்
கைகொட்டிச் சிரிக்கிறது
கேலிச்சித்திரமாய் எங்களை
கிண்டலடித்து..

சந்தா தலைமைகளே
பல்லை இளித்தது போதும்
இளித்தும் – கிழித்தும்
ஓரே கிழிசலாய்
முட்டிக் கொள்ள முடியாமல்
முணு முணுக்கிறீர்களே....

வெட்டிப்பேச்சான
வேலை நிறுத்தங்கள்
எம் வயிறு கழுவ
வழி சொல்லுமா...?



# அப்பச்சி என்னே கவதாத?

அனுஷாவிற்கு
எப்போதும் நான்
மாமாதான்...

இப்போதென்னவோ
அடிக்கடி
"அப்பச்சி" என்று
அந்த பிஞ்சு எனை
கொஞ்சிக் கொள்கிறது

யுத்தம்
அனுஷாவின் அப்பாவை
சுவரில் மாட்டியிருந்த
படத்தில் கம்பீரமாய்
காட்சிப்படுத்தியது

அவளுக்காக பிடித்ததில்
இலயித்து போயிருப்பாள் – இன்று
என்னோடு ஒன்றாய்
தொலைக்காட்சி பெட்டிக்குள்
தொலைந்து போயிருந்தாள்...





'நமக்காக நாம்'
முப்படை விளம்பரம்
பின்னிவிட்டு போனது...

அனுஷா என் மடிவிட்டு
இறங்கி
ஆசையாய் கேட்டாள் – எனக்கு
இதயம்
இடியாய் இடித்தது...

"மாமே அப்பச்சி என்னே
கவ்தாத"
பாவம்,
இந்த தமிழ் மாமா
உதடுகள் பிரிக்க முடியாமல்
ஊமையாய் இருந்தேன்...!



புசல்லாவை கணபதி

# ஒப்பனை வாசிகள்

இருநூறு வருடங்கள்
ஆயுட் கைதிகளாய்
லயச்சிறைக்குள்...

விலங்கொடித்து
வக்கீலாய்
வைத்தியனாய்
ஆசிரியனாய்
கொஞ்சம் கொஞ்சமாய்
வெளிப்பட்டுக் கொண்டே...

எங்கள் தீர்ப்புக்களை
திருத்தியெழுத
திராணியில்லாத
வக்கீலாய்....


மலைத்தலைவர்களுக்கு
வைத்தியம்
பார்க்க மட்டும்
வைத்தியர்களாய்...

டவுனுக்குப்போய்
மாலைவகுப்பு நடத்திவிட்டு
முதல் மார்க்கு வாங்க
முண்டியடிக்கும் – ஒருசில
ஆசிரியர்களாய்...

இன்னும் இன்னும்
முன்னேறிக் கொண்டே
எந்தன் மலைநாடென
இறுமாப்பு கொள்ளும்
எழுத்தாளனும்...

கதைக்குமட்டும் – எங்களை
கருவாக்கி கொண்டு
மேடையில் மட்டும்
கூச்சலிட்டு
கும்மியடிக்கிறார்கள்
பொய்வேசம் போடும்
பூச்சாண்டிகளாய்....





# பஞ்சபூத பங்காளர்கள்

அக்கினி சுவாசத்தினூடான
நாட்கள்

எனக்குமட்டும்
வெளுக்காத கிழக்கு!


கம்பிகளுக்கு வெளியே
வெளிச்சம் பார்க்க
மறுக்கின்ற கண்கள்

என் நாடு...
என் மண்
என் மக்கள்

'அ' எழுதும் போது
அடிமனசில்
அச்சடித்துக் கொண்டது.
எனக்காய் நான்மட்டும்
எதற்காய் இங்குநான
எங்கே என்மக்கள்

என்நாடு எனக்கான
விலங்கிட்டு
அழைத்துக் கொண்டது

மனிதருக்குள்
நான்வேறு
அவர்கள் வேறு



எல்லோருக்குமாய்
பொதுவாக்கப்பட்டிருக்கும்
பஞ்ச பூதங்கள்

மனிதருள் மட்டும்
அவர்கள் வேறு
நான் வேறு

வெளிச்சத்திற்குள்
அவர்கள்...
இந்த இருட்டுக்குள் - எனை
இழுத்து தள்ளிவிட்டு...
பஞ்ச பூதங்களையும்
பங்குபோட
பார்த்துக்கொண்டிருக்கிறாள்!

# என் அன்பான விமர்சகர்கள்


வெற்றிகளின்
வித்துக்கள்
விமர்சனங்கள்

இலட்சிய விருட்சத்தின்
கிளைகளெல்லாம்
வெட்டி வீசினாலும்
ஆணிவேரொன்றால்
ஆக்கப்பட்டவன் நான்

உங்கள் கவ்வாத்துகளால்
காயப்பட்டாலும்
துளிர் விட நீங்களும்
துணையாயிருக்கிறீர்கள்

துரத்துங்கள்
இவன் ஓடிக்கொண்டேயிருக்கட்டும்
இலட்சிய சிறகுகள் கொண்டு
சிகரங்களை தொட்டுவர


விமர்சன இருட்டுக்களில்தான்
வெற்றியெனும்
விடிவெள்ளி
விடுதலை பெறுகிறான்



என் சாதனை துப்பாக்கியின்
இறுதி ரவைவரை
எப்போதும்
இலக்கு தவறாமல்....

விமர்சனங்கள்
வரவேற்கப்படுகின்றன
வெற்றியின்
வித்துக்கள் அவை

நான் வெற்றிச்சிகரத்தில்
நிற்பவன்
பள்ளத்தை பார்க்கின்றேன்
என் அன்பான விமர்சகர்கள்
இன்னும் அடியிலேதான்




# சாத்தான் இரவுகள்

நினைவு தீப்பிழம்புகளை
கக்கிக் கொண்டிருக்கும்
என் சாத்தான் இரவுகள்!

கூப்பிய கரங்களுக்கு
விலங்கிட்டு
என் ஓலமிடலுக்கு
உத்தரவாதமில்லாமல்!


கழுத்தறுக்கப்பட்டு
குற்றுயிராய் கிடக்கும்
என் எதிர்பார்ப்புகளெல்லாம்
கம்பிகளுக்குள்ளே

கல்வி
காதல்
இலட்சியம்
முற்றுமுழுதாய்
அடைதலுக்கான காலக்கதவு
தாழ்ப்பாளிடப்பட்டு...



அ...ய்...யோ!
கத்த நினைக்கின்ற போதெல்லாம்
பூட்ஸ்கால்கள்
என் உதடுகளை
ஊமையாக்கி
உட்கார வைக்கிறது....

சொல்லி விடலாம்
நிரபராதியென்று – இந்த
பூட்ஸ் கால்கள் – என்
குரல் வலைக்கும்
கொஞ்சம்
அவகாசம் கொடுத்தால்...



# அம்மணமாய் கிடக்கும் உள்ளம்

என் பசி அடங்கலுக்காக
காத்திருந்த போதெல்லாம்
விஷப்பொழுதுகள் கொண்டே
விருந்தளித்தீர்கள்...

கட்டிக் கொள்ள - ஒரு
கந்தை துணி கேட்ட போதெல்லாம்
உங்கள் நிர்வாணத்தைக் காட்டி
நாகரீகமென பறையடித்தீர்கள்...!

கற்களையும் மரங்களையும்
கடவுளென காட்சிப்படுத்தினீர்கள்
காவிக்குள் சில வேதமோதும்
சாத்தான்களின் வார்த்தைகளை
கீதையாய் கேட்கச் சொன்னீர்கள்...

தசைப்பிண்டங்களை
ரசித்துவிட்டு
சொர்க்கத்தை கண்டதாய்
காமத்துப்பாலறுந்தி
மயக்கமுற்றீர்...

அவர்முன் குனிதலும்
இவர் முன் கைகட்டலும்
காறியுமிழும் ஈன வாழ்விற்காக
வாடகை சுவாசத்தில்
வாழ்கின்றீர்!

வெட்கக் கேடு
உன்னைப்போல் என்னையும்
மாற்றும் உன் முயற்சிக்கு
மத்தளமடிக்க
எத்தனையோ பேர்...!

கொள்கைகள்
கோசங்கள்
கொடிகள்
மாறலாம் – எல்லாமே
என்னைத்தவிர!

நான் மட்டும் தனித்தவனாய்
சில மனித அஃறிணையிலிருந்து
அப்புறப்படுத்திக் கொண்டு...

கொஞ்சமாவது – வெறுமனே
மகாத்மா ஒப்பனையோடு
ஊசலாடாமல்...

மனிதனாக வாழவேண்டும்
உன்னைப்போல்
வாடகைச் சுவாசத்தில் இல்லாமல்
எனக்கானதொரு
தனித்த சுவாசத்தில்!





# இப்படிக்கு மலையகம்

வலுக்கட்டாயமாய்
வந்து விழுந்து
வசந்தம் தொலைத்தவர்களுக்கு....

அடிமைகளென்ற
பிரகடனப்படுத்தலோடு
அஃறிணைகளையாய்
அடைக்கப்பட்ட லயத்துள்
இன்றுவரை...

செலாங்க சேர்
மாற்றிக்கொள்ள முடியாத
கைகட்டலும்
தலைகுனிதலும்

லயத்துவாழ்வியலை
எழுத்து மூட்டைகளாய்
நிரப்பிக் கொள்ளும்
வாசிகசாலைகள்...

விருதுக்கென்றே
இலக்கியம் படைக்கும் - பல
ஒப்பாரி படைப்பாளர்கள்

ரொட்டியும்
சாயத்தண்ணியும்
சுவையறியாத
அரசியல்,
பிரைட் ரைஸ்
உதடுகள்

விலங்கொடித்து
விடுதலை பெற்றதும்
நகர நாகரிகத்தில்
தொலைகின்ற - எம்
படித்த அறிவிலிகள்

வெட்கக்கேடு
இருநூறு வருடம்
கூடையும் மண்வெட்டியும்
ஆயுத பூஜையில்

இன்னுமின்னும்
விதியென்றும்
சாபக்கேடென்றும்
சாம்பல் கிளறும்
பெரியசாமி கிழவனும்
சின்னராசு அண்ணனும்...

தூ! போதும் நிறுத்து
நீயெல்லாம் சுவாசிக்க
லாயக்கற்ற துர்பாக்கியசாலிகள்

முகாரி மீட்டும் மூடனே - நீ
வெகுண்டெழாத வரை
சாம்பல் கிளறும் தரித்திரம்
நாளைய மலையகத்தையும்
நடைப்பிணமாக்கிவிடும்

பெருமூச்சோடு குற்றுயிராய் நான்
இப்படிக்கு
மலையகம்.



தவழ்ந்து
தட்டுத்தடுமாறி
நடைபயின்று

கை வீசம்மா
பாட்டுபாடி
அம்மாவோடு
பெருவிரல் பிடித்து...

என் காலில் கல்பட
நான் கதறியழுத போது
அம்மாவுக்கு கண்ணீர்

# தலையணை அம்மா...



தூங்கும் போதும்
துணைக்கு அம்மாவாய்
தலையணை வைத்துவிட்டு...
நான் ஓடி விளையாடுமுன்னே
ஓடிப்போனாளே....
காலன் அழைப்பிற்கு
காது கொடுத்து!

பெட்டிக்கு பக்கத்தில் போய்
பெரிசுகளிடம் கேட்டேன்
"அம்மா வேணும்"
அம்மா தூங்குகிறாளாம்!

நிரந்தரமாய் இனி
என் தூக்கத்தின் துணைக்கு
தலையணையே அம்மாவாய்...!



# புடிக்கக் கூடாத பாடங்கள்

"ச்சீ போங்க"
தட்டிவிட்டாள் அம்மா
அப்பாவின் செயல் - அன்று
என் வயசுக்கு
வசப்படவில்லை

"டேய் இங்க வா"
இரண்டு ரூபாவுக்கு
அப்போது மூன்று பீடி
நான் தான்
வாங்கி வந்தேன்
ஒன்றை ஒளித்து வைத்தேன்!

"உங்க அம்மாகிட்ட
சொல்லிபுடாத"
உண்டியல் உடைத்ததில்
எனக்கும் கொடுத்தார்
இரண்டு ரூபாய்





"எல்லா சாமானும்
விலையேறி போச்சி"
கொள்ளையடித்து அப்பா
குடித்து விட்டு
வந்தபோது...

அப்பா கிளாஸ் பீஸ்
கட்டணும்பா
என் நம்பிக்கையற்ற
எதிர்பார்ப்பு
நிறைவேறாமலே....

இப்போதெல்லாம்
அப்பா பெருமையாய்
பேசிக்கொள்கிறார்
"எனக்கென்னா குறைச்சல்
என் மகன் கொழும்புல
புடவைக்கடையில
வேல செய்றான்"

ஒருநாள்
அப்பாவுக்கு சொல்ல வேண்டும்
படிப்பைத்தவிர - எனக்கு
எல்லாவற்றையும் நீங்கள்
படித்துக் கொடுத்தீர்களென்று...



# கடவுள் படைக்காத மனிதர்கள்

கடவுள் உலகத்தை
கவிதையாய்
எழுதி முடித்திருந்தான்....

ஆஹா பிரபஞ்சம்
எவ்வளவு அழகானது....

பச்சைக்கட்டிக்கொண்ட
இயற்கை பெண்ணை
பார்த்து ரசித்தான்

ஓடைகளென்ன
தமிழ்ப்பெண்களா
இரட்டைக்கிளவியை
கட்டிக் கொண்டு சலசலக்கிறதே!

என்றோ ஒருநாள்
இலட்சியத்தை எட்டுவோமென்று
தொழிலாளியின் எண்ணம்போல்...
விண்ணைத்தொட எத்தனிக்கும்
மலைமுகடுகள்!

கடவுள் கடல்களை
காணகின்றான்
நிறைகுடம் தளும்பாதென்று
கடல் அமைதியாய்
ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது.

உலகம் எவ்வளவு
அழகானது.



ஆமாம்,
மனிதர்கள் எங்கே...
ஒரு முறை மனிதனையும்
பார்த்துவிட வேண்டும்

அதோ சாக்கடையில்
மேடையமைத்து ஒருவன்
வாக்குறுதி பொய்களை
ஏலம் போட்டுக்கொண்டிருக்கிறான்
ஓ... அவன் அரசியல்வாதி!

அடுத்தவன்
யாரவன்
உயிரின் பெறுமதியை
ரூபாவில் மதிப்பிடுகின்றானே
ஓ.... இவன் வைத்தியன்!

அதோ வருகிறான்
இவன் மனிதனாக
இருக்க வேண்டும்
கறுப்புச்சட்டைக்குள் ஏதோ
ஒளித்து வைக்கிறானே?
சட்டமாக இருக்கலாம்
பணநாயகம் பேசுபவன்
இவன் மனிதனல்ல
சட்டத்தரணி...!

ச்சே!
மனிதர்கள் எங்கே?
கடவுள்
சலித்துக் கொண்டார்

தூரத்தே நாலுபேர்
ஓடிச்சென்று
கேட்கிறார்

ஓ! ஆசிரியர்கள்!
கல்விச்சாலைகள்
மனிதர்களை படைக்கவில்லையா
கல்லறைகள் போல
சாத்தான்களையல்லவா - நான்
கண்டேன்!

ஆசிரியர்களே
நீங்களாவது
மனிதர்களை படைப்பீர்களா?

முடிவெடுத்துக் கொண்டு
கடவுள் முடிவுரை எழுதினார்

கடவுள் உயிர்களை
படைத்துவிட்டு யோசித்தார்
மனிதர்களை
ஆசிரியர்கள்
படைப்பார்களென்று...!

# விநாடி பார்வையும் மணித்தியால காத்திருப்பும்

துடிப்பு மறக்காத
உள்ளத்தை போல்
எனக்குள் நீ
அனிச்சையாய்....!

தினசரி உன்முகம்
பார்த்து வாசித்துக்கொள்ளும்
ஒரு மௌனக்கவிதை

உன் விநாடி பார்வைக்காய்
என் மணித்தியால
காத்திருப்புக்கள்....!

ஏதோ எதேச்சையான
உன் துப்பட்டா
ஸ்பரிசத்தால்
அழகாகி போகின்ற
நாட்கள்....

ஒரு பனித்துளிபார்வை
பாறாங்கல் உடைத்த
அதிசயம்

அடிக்கடி சரணடைகின்றேன்
சிறைபிடித்துக்கொள்ளாமல்
சிரித்துக் கொண்டிருக்கிறாய்...

அஜந்தா ஓவியத்தை
கேலி செய்கின்ற
உன் நகப்பூச்சு
என்கவிதைகளுக்கான கருவாய்...!





பொறாமை கொண்ட இயற்கை
சூரியனை சீக்கிரம் விரட்டும்
பொழுதுகள்,
உனை பார்த்தலில்
பாதியிழக்கின்றேன்.

உன் ஞாபகங்களை
வலுக்கட்டாயமாய்
கட்டிப்பிடித்துக் கொண்டே
இமை மூடிக்கொள்கிறேன்
என் இரவுகளில்!

உனக்காய்
என் மொத்த சுவாசத்தையும்
உயிலெழுதிவிட தயாராய்...

உன் ரெட்டை விழிகள்
இந்த ஒற்றை உடலுக்கு
உயிர்கொடுத்து பெயர் சூட்டியது
'காதல்'

மீண்டும் மீண்டும்
முயற்சிக்கின்றேன்
என் மனசு திறந்து
மணிக்கணக்காய் பேசுவதற்கு...

ஆனால் ஏனோ...?
உன் விநாடி பார்வைக்காய்
என் மணித்தியால
காத்திருப்புக்கள் மட்டும்
தினசரி காத்திருக்கிறது...!

# விருதுகள் தேடாத எருதுகளாய் இரு

வெட்கக்கேடு...
வீழ்த்துபவர்களையும்
வாழ்த்தும் வேதாந்தம் கற்கும்
உனைபற்றி...

எதோ,
வாழ்தல்பற்றிய அக்கறையோடு
யார் யார் பின்னாலோ
கைகட்டி வாய்பொத்தி...


எல்லாவற்றுக்குமான
எட்டடி காம்பிராவுக்குள்
விடுதலைபற்றி எண்ணாதே
ஒட்டடை படிந்த மூளை
உனக்கு மட்டும்தான்

கொஞ்ச கொஞ்சமாய்
விலங்கொடித்து வருபவனையும்
எட்டி உதைக்கும்
எத்தர்களின் எட்டப்பனாய் நீ...

எதோ,
வைத்தியரின் அவசரக்கிறுக்கலாய்
மலையகத்தின்
தலையெழுத்து

திருவிழாக்காலங்களிலும்
மதுவிழாக்கள் நடத்தும்
மனித மாக்களில்
நீயும் ஒருவனாய்..!.





இலக்கிய சந்தையில்
அமோக வியாபாரம்
நம்மவர் பற்றி எழுதும்
வர்த்தக படைப்பாளிகளுக்கு....!

நிரப்பப்படும் நூலகம்
சமூகம் மட்டும்
தாழ்ந்து கொண்டே...!

விருதுகளுக்காய்
விண்ணப்பித்தது போதும்
எருதுகளாய் இருந்து

மலையக கழனியில்
மாற்றம் செய்வாயா?

கவலை பெருமூச்சோடு
அரைக்கம்பத்தில் பறக்கும்
மலைநாட்டின் தேசியக்கொடி...!

மலைத்தமிழா....
கம்பிகள் உடைத்து
வெளியே வா...
பறப்பதற்கான சிறகுகள் தர
உன் தோழர்கள்
பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்...


பொய்யாய்
பொய் பேசாத
என் உதடுகள்

வாழ்தலுக்காய்
பிறர் பின் செல்லாத
மானமிழக்காத
என் மனிதம்...

உரிமைக்குமட்டுமே
குரலெழுப்புகிற போதெல்லாம்
தொண்டை நெரிக்கப்பட்டு
குரலறுக்கப்பட்டது!

மாற்றங்களுக்காய்
மகாத்மா வழியில்
அஹிம்சையை
அடையாளப்படுத்தினேன்

# சமூகத்தின் விமர்சன சவுக்கடிகள்



மதாபிமானிகளின் மத்தியில்
மனிதாபிமானம்பற்றி
பிரசங்கம் செய்தேன்

சமூக விடிவுக்காய்
இருட்டு கலைக்க
பல விழிகள் திறந்தேன்...

மதிக்கவும்
பின் மதிப்பீடு செய்யவும்
மனிதர்களாலேயே
வேறாக்கப்பட்டேன்

இவ்வளவும் – என்
வேர்கள் வெட்டுவதறியாமல்
ஒப்பனை உலகத்தில்
உசலாடிக் கொண்டிருந்தேன்!


நிச்சயம் முடியுமென்று
நிமிர்ந்து நிற்கின்றேன்
என் ஆணிவேர் நம்பிக்கையோடு...!


சமூக விமர்சனங்கள்
சவுக்கடி கொடுக்கின்ற போதெல்லாம்
மானமிழந்து மனிதரிலிருந்து
ஒரு மகாத்மாவுக்கான வாழ்தலோடு
ஒதுங்கிக் கொள்கின்றேன்!

யார் யாரோ
இமயம் தொடுதலுக்காய்
படிக்கட்டுகளாய்
முகவரி காட்டினேன்....

எலும்பொடித்து விறகெரிக்கின்ற
எத்தர்களை
காட்சிப்படுத்தினேன்...

விழும்போதெல்லாம்
மறுபடி மறுபடி எழுகின்ற
ஒற்றைச் சூரியனைப் போல்
நான் நானாகவே...





# ஒரு ஆத்ம சாந்தி மௌனம்

கடைசியாய்
பாடம் முடிந்து
அழிக்கப்படாமல் கிடக்கும்
கரும்பலகையாய் – நீயெனை
கண்டு கொள்ளாமலே...

பலநாள் கழித்து
பள்ளிக்கு உனைக்காணவென
ஓடி வருகையில்
பாதைமறிப்பு போராட்டத்தில்
என் பேருந்து தடையில்
பயணத்தவிப்பாய் நான் !

ஒரு திருவிழா நெரிசலில்
முண்டிக்கொண்டு முன்வந்து
உனைக் காணாமல்
கிலுகிலுப்பை தொலைத்துவிட்டு
தவிக்கின்ற குழந்தையை போல்
வீடு சென்றது...

உனக்கு மட்டுமே காட்டவென
நான் எழுதிய கவிதையை
என் அம்மா பழைய பத்திரிகையோடு
எடைக்கு சேர்த்ததையெண்ணி
ஒரு நாள் மௌன விரத போராட்டம்
நடத்தியது...

என் தமிழ் பற்றால்
உன் பெயரிலேயே
ஒரு சஞ்சிகை வெளியிட
முயற்சி செய்தது...

புசல்லாவை கணபதி

உன் கையசைப்புக்காகவே
உன் சாலையில் செல்லும்
பஸ் தரிப்பிடத்தில்
பல மணிநேரம் தவமிருந்தது!

எல்லாம் யாருக்காகவோ
செய்யும்
ஆத்மசாந்தி மௌனத்தை போல்
எனக்குள்ளே...

இதுவரைக்கும்
இறக்கி வைக்க முடியாத
மனித வெடிகுண்டை போல்
முட்டிவரும்,
கண்ணீர் துளிகளோடு
மூச்சிரைக்கின்றேன்...



பெண்ணே உனக்கு மட்டும்
இலவசமாய் நகப்பூச்சு
தேயிலைக்கறை!


எம் பரம்பரை தேடியும்
கிடைக்காத
தேங்காய் மாசியை,
உனது தேடலை
உற்சாகப்படுத்த
ஓர் கொங்காணி மகுடம்!

தேயிலைக்குள்ளே
அட்டை வாசிகளுக்காய்
நாளாந்தம் நீ நடத்தும்
இரத்த தானம்

திறந்த வெளியில்
திரிந்தலைந்துவிட்டு
அடைந்து கொள்ள – நீ
ஆசையாய் வரும்
லயக்கொடாப்பு!

பாதிவிழி மூடும் போதே
மது சுமந்த மனிதனுக்கு
மேடையாகி போகின்ற
உன்மேனி!

# தொடருந்து துன்பங்கள்



அருவருப்புக்கள் மட்டுமே
உன் நாளாந்த விருப்புக்களாய்!

உடுத்தலுக்கும்
போர்த்தலுக்கும்
உபயோகப்படும் – அந்த
தீபாவளி ஒயில் சேலை!

பண்டிகை காலத்தில் மட்டுமே
முச்சக்கர வண்டியில்
நகர்வலம் செல்கின்ற – ஓர்
நல்லநாள்!

நேற்றோடு – உன்
பென்சன் வரவுக்குப்பின்
சாவுமணியடிக்கப்பட்ட
சஞ்சல வாழ்க்கை

உனக்கான தொரு
ஓய்வு உறுதிப்படுத்தப்பட்டாலும்
புதிதாய் பேர் பதிந்த – உன்
மூத்தமகள்,
முனியம்மா...?

என் அவதரிப்பினை
அர்த்தப்படுத்தல் பொருட்டு
புதிய சமூகமொன்றை
பிரசவிக்கும் முயற்சியோடு...

அந்த நவீன சமூகம்...
அடிமை குற்றுயிராக்கப்பட்டு
கோழைத்தனம்
கொன்றொழிக்கப்பட்டு...

இளைய உதடுகளெல்லாம்
பாரதி வசனம் பேசிக்கொண்டு
குருதி துணிக்கைகளிளெல்லாம்
உணர்வால் சூடேற்றிக் கொண்டு...

அநியாய அட்டூழிய
அராஜக சாக்கடைகளை
கர்ஜனை செய்து
கொடும்பாவி எரிக்கின்ற
மனிதச் சிங்கங்களாய்...



அறிவாளர்கள் மட்டுமே
நிற்கக் கூடிய
அரசியல் மேடையமைத்து
ஜனநாயகத்திற்கு
விடுதலையளிப்பேன்!

என் இருட்டை கிழிக்கும்
இந்த சூரியக்கனவுகள்
நாளை பலிக்கும் என்ற
நம்பிக்கையோடு...

அதோ! அக்கினி குஞ்சுகளாய்
தெரியும்
என் மலையகத்தம்பிகளை
தயார்படுத்திக் கொண்டிருக்கிறேன்.



அப்பாவோடு
கைபிடித்து
காபட் உடுத்திக்கொண்ட
வீதிகளில் ஆசையாய் நடந்து...


பச்சைபசேல்
தேயிலைச்செடிகள்...
லயன்கள் காணாமல்போய்
சின்னச்சின்ன வீடுகள்...


குமாரண்ணன் சட்டத்தரணியாகவும்
சரவணன் வைத்தியனாக்வும்
முகிழுந்தில் செல்கின்ற
சாதனை காட்சிகள்...

கட்சிகளெல்லாம்
ஒற்றைக்கொடியில்
ஒய்யாரமாய் பறக்கின்றது...

துப்பரவு செய்யப்பட்ட
மதுசாலைகள்....
வாசிகசாலைகளை
வாங்கிக்கொண்ட பூமி!

தொழில்நுட்பம்
கூடைகளை
துரத்திவிட்டு....
கொழுந்தெடுக்கும் முயற்சிகளில்...





அரசியல் – கலை – இலக்கியம்
பொட்டல் வெளிகளில்
மேடையேறிக் கொண்டிருந்தன...

குனிந்தவர்கள் நிமிர்ந்தும்
ஏமாந்தவர்கள் எழுந்தும்
நடேசய்யரையும்
சிவியையும் நெஞ்சில் சுமந்தார்கள்.

புதிய மலையக
பிரசவிப்புக்காய்
நேற்றைய தியாகிகள்
சிலைகளாய்
நிமிர்ந்து நிற்கிறார்கள்...

திடுக்கிட்டு
"அப்பா" என்கிறேன்...
அப்பாவுக்கு எப்படிச்சொல்வது
என் கனவு மலையகத்தை?





# திருமதி வயது செல்விகள்

பறக்கும் தட்டுகளா?
கூரைக்குமேலே
வியக்க வைக்கின்ற
செட்டிலைட் அண்டனாக்கள்!

நாளாந்தம் குடும்பமே
சயனித்து சமாதியாகும்
தொலைக்காட்சிப் பெட்டியில்!

ஒப்பனைக்காய் அழுகின்ற
சீரியல் மங்கையருக்காய்
ஒப்பாரி வைக்கின்ற
திருமதி வயதை தாண்டியும்
செல்வியாகவே வலம் வரும்
நம் பெண்கள்...!



தொலைக்காட்சிப்
பெட்டிகளையும்
சீடி பிளேயர்களையும்
இலட்சியமாய் தோள்களில்
சுமக்கின்ற
சுவாசமாக்கள்!


மரணித்து போகின்ற
கலாசார பண்பாடு
திருக்குறள் உட்கார மறுக்கிற
உதடுகள்
'வாடாமாப்பிளையோடு'
வாழ்க்கைப்பட்டது!

தோலைக்காட்சிப் பெட்டியாய்
கோவண நாகரிகம்
வன்முறைகள் நிரப்பியபடி
காத்திருக்கிறது
நாளை மனிதம் தின்கின்ற
சாத்தான்களாய்...!

என் வலுக்கட்டாயங்கள்
எல்லாவற்றையும்
சுக்கு நூறாக்கி விட்டு – உன்
திசை தேடியே
சுவாசம் தேடுகிற என்மனசோடு...

ஓர்தனிமை விரும்பியாய்
சிரித்தலும் அழுதலுமென – என்
நாட்களெல்லாம்
சுமைகளை மட்டுமே தந்து
உன்னைப் போலவே
ஒதுங்கிக் கொள்கிறதே

புழுதி படிந்த – நீ கொடுத்த
பழைய கடிதக் கவிதைகளை
எத்தனை முறை
என்துணைக்காய்
எடுத்து படிப்பது?



# கல்லறை வாசல் கதவடைக்கப்படுகிறது

வெறுமனே ஒரு
காணிக்கைச் சிரிப்பைக்கூட
உதிர்க்காத உன்னை
இன்னமும் இன்னமும்
நினைவுகளில் மனைவியாய்
என் தூக்கம் வரை
அழைத்துச் செல்கிறேனே...

உன் குரூர வேதனை தணலில்
வெந்து சரிவதானாலும்
உனக்கென்றால் – என்னுசிரை
உள்ளங்கையிலெடுத்து
புனிதம் கெடாத காதலை
நிரூபித்த திருப்தியில்
கல்லறை வாசலின்
கதவடைத்துக் கொள்வேன்...!



# அஹிம்சையாய்




# ஒரு கொலை!

கத்தியில்லை
காயமில்லை
அஹிம்சையாய் கொல்கிறது
உன் பார்வைகள்!

எல்லோருக்குமான இரவு
எனக்கான பகலாய்
உன் நினைவுகளால்
கண்களில் கடல் நீர்
பொழுது விடிந்ததும்
கைகுட்டையாய் உன்முகம்!

நீ நெருப்பு என்று
சொல்கிறாய்...
அணைக்கவரும்
என் ஈரமனசையும்
சேர்த்தா பற்ற வைப்பது?

கதையில் படித்த
தேவதைகள் எல்லாம் பொய்
அவர்கள் உன்னைப்போல்
எப்போதாவது
தரையில் நடந்தார்களா சொல்?



உனக்குப் பிடித்த விசயம்
பற்றியே பேச்செடுப்பேன்
நீ பேசும் அழகை
இரசிப்பதற்காகவே!

நான் உன் சுடிதார்
துப்பட்டாவாகவாவது
இருந்திருக்க கூடாதா
உன் தோள் மீதாவது
சாய்ந்திருப்பேனே!

எனை பற்றிய நினைப்பு
உனை தொடும் வரையில்
என் புலம்பல்
ஒரு வாசிக்கப்படாத
கவிதையாய்...!

அம்மாவுக்கு ஒரு சேலை
அப்பாவுக்கு ஒரு சட்டை
தொட்டில் தங்கைக்கு
சிவப்பு நிற கிலுகிலுப்பை...

ஜோன்சினா டீசேர்ட்
மைக்கேல் ஜெக்சன் டவுசர்
இரட்டை இணைப்பு சீனா பைபேசி
தலைமயிருக்கு
ஆரஞ்சு நிறச் சாயம்...

வாடகைக்கு அமர்த்தப்பட்ட
முச்சக்கர வண்டியில்
நண்பர்களோடு
நகர்வலம்...

நிலம் பார்த்து நடக்க
நினைப்பு வரும்
"அ" சொல்லித் தந்த
ஆசானை கண்டால்

விண்ணைத்தாண்டி வருவாயோடு
அங்காடித்தெருவில்
பையாவோடு
சில இறுவட்டுகள்...
ஊருக்குள் தற்போதைய
கதாநாயகனாய்...

இரண்டு மூன்று ஆயிரங்கள்
நூறு ரூபாவாய்
மெலிந்துபோக

பாடம் சொல்லித்தராத அப்பா
உனக்கு பட்டம் தருவார்
"உருப்படாத தண்டச்சோறு..."

நாளை மீண்டும்
நுழைவாய்
"மலையகத்தவர் விரும்பத்தக்கது"
பிரபல சைவ உணவகத்திற்குள்

பாதியில் படிப்பைத் துறந்த
16 வயது
பயிற்சி சமையற்காரனாய்...!



# மலையகத்தவர் விரும்பத்தக்கது...



# நான் உன்னைப்போல் ஒருவனல்ல...

அய்யோ!
முகாரி அவலம்
முந்திக்கொண்டு – என்
காது கட்டுடைக்கின்றது
கோரத்தாண்டவ கொலைவெறி
சாத்தான்கள் என்
விழிநெருப்பால்
சாம்பல் செய்ய கண்கள்
அக்கினி பிரவேசத்திற்காய்
ஆயத்தமாகின்றது...

வாக்குறுதி பொய்களால் – எம்
வாழ்வை தின்று ஏப்பம் விடுகிற
வேட்பாளன் முகத்தில்
காறியுமிழ்ந்து – ஈனராய்
காட்சிப்படுத்த செந்நா
வேட்கையாய் விரைகிறது!

அம்மணம் மறைக்காத
ஒரு விலங்கினை போலன்றி
ஒரு மானமுள்ள
மனுசனாய்,
அதர்மமழிக்கும் சம்ஹாரனாய்
பயணித்துவிட்டேன்

எனக்கும்
எதுவுமற்ற வெறுமையாய்
இருக்கத்தான் பிடிக்கின்றது

தான் தோன்றித்தனமாய்
ஒரு சித்தனைப்போல்..
ஆசை நிரப்பப்படாத
மனசோடு...

எங்கே முடிகிறது...
விழிமுன் துகிலுரியப்படுகிற
நவீன திரௌபதைகளையும்...

மா பாவங்களையெல்லாம்
தத்தெடுத்துக்கொண்ட...
வஞ்சக சாத்தான்களை
காண்கின்ற போதெல்லாம்...

வாயடைத்து
காதுகள் பொத்தி
விழிகள் மூடிக்கொண்டும்
உன்னைப்போல்
ஒருவனாய்...
இருக்க நினைக்கின்ற
போதெல்லாம்...

வாயடைத்தும்
காதுகள் பொத்தியும்
வழிகள் மூடிக்கொண்டும்
உன்னைப்போல் ஒருவனாய்...
இருக்க நினைக்கின்ற போதெல்லாம்
எனையொரு மானமுள்ள மனுஷனாய்
மனசு ஞாபகப்படுத்துகிறது!

வாயடைத்தும்

காதுகள் பொத்தியும்

விழிகள் மூடிக்கொண்டும்

உன்னைப்போல் ஒருவனாய்

இருக்க நினைக்கின்ற போதெல்லாம்

எனையொரு மானமுள்ள மனுஷனாய்

மனசு ஞாபகப்படுத்துகிறது

- புசல்லாவை கணபதி



KADAVUL PADAIKATHA MANITHARKAL

ISBN 978-955-9084-24-2

Design by : Design Lab, 0114 575 7